சனவரி - 2012

திருவள்ளுவர் ஆண்டு 2043

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி : 56
பகுதி : 3

விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




சிவநெறிச் செல்வர் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களின்
நூற்றாண்டு நினைவு நாள் விழாவன்று பிற்பகல் நிகழ்வில் நடைபெற்ற
வாழ்த்து அரங்கில் கலந்து கொண்ட செயலர்கள் மற்றும்
தமிழகத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்புச் சான்றோர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 56 திங்கள் இதழ்

பகுதி : 3 திருவள்ளுவர் ஆண்டு 2043

சனவரி 2012




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தமிழ்க்கலங்கரை விளக்கம் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரவர்களின் நூற்றாண்டு நினைவு நாள் விழா சிறப்புக் கட்டுரை | முனைவர் மு. மீனா | 4 |
| நீளும் அவரின் நினைப்பு | தமிழாகரர் தெ. முருகசாமி, புதுச்சேரி | 16 |
| நூற்றாண்டு விழா அழைப்பிதழ் | | |
| போடிநாயக்கனூரில் வடக்கு வாய் செல்வியாக கண்ணகி | என். ஆசாதேவி | 17 |
| ஐங்குறுநூறு மருதம் உணர்த்தும் தேசியம் | பா. வாணிஸ்ரீ | 21 |
| தொல் பொருளதிகாரம் பாடப்பிரிவின் தேவை | பேரா. முனைவர் இ.கி. இராமசாமி | 23 |

# இதழ் மணம்

**அன்புடையீர்,**
**செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.**

*அன்புடையீர், வணக்கம்.*

இம்மாதச் செந்தமிழ் இதழ் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களின் நூற்றாண்டு நினைவு மலராகத் தங்கள் கைகளில் தவழ்கிறது. 2011 டிசம்பர் இரண்டாம் நாள் வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்களின் நினைவு விழா மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் உள்ள அன்னாரின் அருள்வளாகத்தில் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றது. அவ்விழாவின் நிகழ்வினை எம் கல்லூரியின் முதல்வர் முனைவர் மு. மீனா அவர்கள் சிறப்புக் கட்டுரையாகச் சிறப்பாகத் தந்திருக்கிறார். தொடர்ந்து அவ்விழாவின் அழைப்பிதழ் இணைக்கப் பெற்றுள்ளது.

தொடர்ந்து என். ஆசாதேவி அவர்களின் போடி நாயக்கனூர் மலைப்பிரதேசங்களின் வடக்குவாய்ச் செல்வியாகக் கண்ணகி எவ்வாறு போற்றப் பெறுகிறாள் என்ற கட்டுரை இடம் பெறுகிறது. வாணிஸ்ரீ அவர்களின் மருதம் உணர்த்தும் தேசியத்தை ஐங்குறுநூற்றுப் பாடல்களில் இருந்து தந்து நம்மை வியக்க வைக்கிறார்.

பேராசிரியர் முனைவர் இ.கி. இராமசாமி அவர்களின் 'தொல்பொருளதிகாரம் பாடப்பிரிவின் தேவை' என்னும் கட்டுரை வாசகர்களின் மிகப் பெரிய வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

வேழவேந்தன் அவர்களின் கவிதையோடு கவிஞர் அ.கனக சபாபதியின் கவிதையும் தெ. முருகசாமி அவர்களின் கவிதையும் கவிதைப் பிரியர்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது.

தொடர்ந்து வாசகர் வாசகங்களின் கடிதங்களோடு உங்களுடைய கருத்துக்களையும் எதிர்பார்க்கும் செந்தமிழ் இதழ் உங்களை வாழ்த்துகிறது.

**முனைவர் க. சின்னப்பா**

**இனி நீங்களும் இதழும்....**

# தமிழ்க்கலங்கரை விளக்கம் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரவர்களின் நூற்றாண்டு நினைவு நாள் விழா சிறப்புக் கட்டுரை

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொ.)
செந்தமிழ்க் கல்லூரி

"பால்கெழு சிறப்பின் பல்லியம் சிறந்த
காலை முரசக் கனைகுரல் ஓதையும்
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்
மாதவர் ஓதி மலிந்த ஓதையும்
மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோர் எடுத்த நாலணி முழுவமும்
போரில் கொண்ட பொருகரி முழக்கமும்
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்
பணைநிலைப் புரவி ஆலும் ஓதையும்
கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்
கார்க்கடல் ஒலியில் கலிகெழு கூடல்
ஆர்ப்பொலி" இனிதோங்கி விளங்கிய இளங்கோவடிகள் காட்டிய நான்மாடக்கூடல் மதுரை காட்சி, நீண்ட நெடிய வரலாறுகளுக்குப் பின்னர் டிசம்பர் 2, 2011ஆம் நாளன்றும் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தது.

திருவள்ளுவராண்டு 2042 கார்த்திகைத் திங்கள் 16ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று, மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்து நிறுவனர், சிவநெறிச்செல்வர், பாலவநத்தத்துப் பேராண்ட மாமன்னர், வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரவர்களின் நூற்றாண்டு நினைவுப் பெருவிழா தான் மேற்காட்டிய வண்ணம் திகழ்ந்தது.

நூற்றாண்டு நினைவுப் பெருவிழா நிகழ்ச்சியானது, மாட்சிமைதாங்கிய மன்னர் நா. குமரன் சேதுபதி அவர்கள் தலைமையில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆற்றல் மிகு செயலாளர் திருமிகு இரா.

அழகுமலை எம்.ஏ.எம்ஃபில்., அவர்கள் மற்றும் செந்தமிழ்க் கல்லூரியின் சிறப்புமிகு செயலாளர் இரா. குருசாமி பி.ஏ. அவர்களின் முன்னிலையில் தொடக்கம் பெற்று, தமிழறிஞர்களின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்தது.

ஒருவர் வாழ்ந்து கொண்டிருக்கும் நாளில் பிறரிடமிருந்து பெறும் பாராட்டுதலும், பரிசும், விருதும் அளவுகோலாகக் கொண்டு எந்தவொரு தலைசிறந்த மாமனிதரின் பீடும் பெருமையும் கணக்கிடப்பட இயலாது. அவர் பூவுலகை விட்டு நீங்கிய பின்றை, மற்றவரால் அவரின் நினைவு போற்றப்படுகின்ற விதமே அவரின் தலைசான்ற பண்பை வெளிக்காட்டும். அவ்வகையில், வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களின் மேன்மை நூற்றாண்டு நினைவுப் பெருவிழாவில் அனைவரும் உயத்துணரும் வண்ணம் அமைந்தது.

02.12.2011 அன்று வைகறைப் பொழுது மன்னரின் நினைவுகளோடு விடிந்தது என்றால் மிகையில்லை. காலை 9 மணிக்கு, மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் குழுமியிருந்தோர் வள்ளல் அவர்களின் பெருமைகளை எண்ணி வியந்து கொண்டே, பெருமகனாரின் திருவுருவச்சிலைக்கு மரியாதை செய்ய ஆயத்தமாகினர். மலர்க்கிரீடம் மற்றும் மலர் வளையங்களால் அலங்கரிக்கப்பட்ட வள்ளலின் திருவுருவச்சிலை அமைவிடம் நோக்கி,

மாட்சிமைதங்கிய மாமன்னர் நா. குமரன்சேதுபதி அவர்கள்.
ஆற்றல் மிகு தமிழ்ச்சங்கச் செயலாளர்
திருமிகு இரா. அழகுமலை அவர்கள்,
மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள்
திருமிகு சு. வீரணசாமி, அவர்கள்
திருமிகு க. முத்தையாபசும்பொன் அவர்கள்
ஆகியோர் அணிவகுத்துச் செல்ல,

செந்தமிழ்க் கல்லூரி முதன்மையர் முனைவர். சின்னப்பா அவர்களின் வழிகாட்டுதலோடு, செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் (பொ.) உள்ளிட்ட பேராசிரியர்களும், செந்தமிழ்க் கல்லூரி கண்காணிப்பாளர் உள்ளிட்ட அலுவலர்களும், மாணவ, மாணவியரும் ஒருங்கு திரண்டு அணி ஊர்வலமாகத் தமிழ்ச்சங்கச் சாலையில் சென்ற காட்சி, ஒப்பற்ற தலைவரின் தமிழ்ப் புகழ் தெருவெல்லாம் பரவும் வகையில் அமைந்தது.

"பகை தெறல் அறியாப் பயன்கெழு வீதியாக" தமிழ்ப்பயன் கெழு வீதியாகத் தமிழ்ச்சங்கச் சாலை அன்று காட்சியளித்தது.

தலைமைப் பண்பாளர்கள் மாலையணிவித்து மகிழக் கூடியிருந்தோர் அனைவரும் மனங்குளிர்ந்து நினைவஞ்சலி செலுத்தினார்கள். மதுரை மாநகரப் பெருமக்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு நினைவஞ்சலி செலுத்தினார்கள். மீண்டும் ஊர்வலமாகத் திரும்பி, வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரவர்களின் அருள் வளர்கமான மதுரைத் தமிழ்ச்சங்க வளாகத்தைச் சென்றடைந்த பொழுதே, விழாவில் பங்கேற்கத் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் தமிழ் ஆர்வலர்களும், தமிழ்ச் சான்றோர்களும் ஒருங்கு கூடத் தொடங்கினர்.

வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரவர்கள் சிவநெறிச் செல்வராகத் திகழ்ந்தமையாலும் சைவமடங்களைத் தன்வாழ்நாளில் ஆதரித்து வந்தமையாலும் பெருவிழாவில் திருவாவடுதுறை, தருமை, மதுரை, கயிலை, காமாட்சிபுரி ஆதீனங்களைச் சார்ந்த குருமகா சன்னிதானங்கள் அனைவரும் பங்கேற்று அருளாசி வழங்கத் தங்களின் கனிவான ஒப்புதலை நல்கினர்.

நூற்றாண்டுப் பெருவிழாவிற்கு முதலில் வருகைபுரிந்த திருக்கயிலாயப் பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 23வது குருமகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும், மதுரை ஆதீனம் 292வது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும், காமாட்சிபுரி ஆதீனம் அங்காளபரமேஸ்வரி சித்தர்பீடம் மகா சமஸ்தானம் ஸ்ரீலஸ்ரீ சிவலிங்கேஸ்வர சுவாமிகள் அவர்களும், பாண்டியன் நூலகத்தில் வணங்கிப் பூசித்து வரப்படுகின்ற வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு முதலில் அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர், மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலாளர், செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் மற்றும் வருகை புரிந்த அனைவருக்கும் அருளாசி வழங்கினார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் .என்று பெருமிதத்துடன் அழைக்கப்படும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் வள்ளல் பொன்.

பாண்டித்துரைத்தேவர் அருள் வளாகம் என்றழைக்கப்படும் கட்டிடப்பணி நடந்து கொண்டிருக்கக்கூடிய கலையரங்கம் வண்ணமிகு பட்டாடையுடனும் சரசரக்கும் பொன்னிற அசைந்தாடிகளுடனும் அழகு சிகப்பு கம்பளங்கள் விரிக்கப்பட்டும் மின் விளக்குகளால் ஒளியூட்டப்பட்டும் மிளிர்ந்தது. வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்களின் நினைவுப் பெருவிழா சிறப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் பொலிவுடன் அமைக்கப்பட்ட இவ்விழா அரங்கில் நிகழ்த்தப் பெற்றன.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பாண்டியன் நூலக வளாகத்தில் வீற்றிருந்த குருமகா சன்னிதானங்கள் அனைவரும் விழாவிற்கு வருகை புரிந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள், செந்தமிழ்க் கல்லூரி கல்விக்குழு உறுப்பினர்கள், செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர் - அலுவலர் - மாணவர்கள், சிவநெறியைப் பின்பற்றும் சிவநெறிச் சிந்தனையாளர்கள், தமிழுணர்வுமிக்க தமிழ் ஆர்வலர்கள் வள்ளல் மீது பற்றுகொண்ட அன்பர்கள், நகரப்பெருமக்கள், சான்றோர்கள், பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி அன்பர்கள் அனைவருக்கும் அருளாசி வழங்கிய பின்னர், மிகச்சரியாக முற்பகல் 10 மணிக்கு நினைவுப் பெருவிழா தொடங்கியது.

அலங்கார மேடையில் திருவாவடுதுறை ஆதீனம், தருமை ஆதீனம், மதுரை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், காமாட்சிபுரி ஆதீனம் ஆகிய ஆதீனங்களைச் சார்ந்த குருமகா சன்னிதானங்கள் வீற்றிருந்தனர். அவர்களுடன் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தலைவர் மாட்சிமை தங்கிய மன்னர் நா. குமரன்சேதுபதி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலர் திருமிகு இரா. அழகுமலை அவர்கள், செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திருமிகு இரா. குருசாமி அவர்கள், செந்தமிழ்க் கல்லூரி முதன்மையர் முனைவர் க. சின்னப்பா அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிப் பேரவை உறுப்பினர்ள் திரு. க. முத்தையா பசும்பொன் அவர்கள், திரு சு. வீரணசாமி அவர்கள் ஆகியோர் வீற்றிருந்தனர். சிவ, சிவ என்றொலிக்கின்ற மந்திரஒலியை அனைவரும் கேட்டிருக்கலாம். ஆனால் சிவ என்னும் மந்திரவொலி காட்சியளித்தால் எங்ஙனம் திகழுமோ, அங்ஙனம் விழாமேடை திகழ்ந்தது.

பெருவிழா தமிழ் இறையிசையோடு தொடங்கியது. தருமை ஆதீனத்துப பெரும் புலவர் திரு. குருசாமி தேசிகரின் குழுவினர் தேவாரப் பாடலை இசைத்தனர். வருகைபுரிந்த அனைத்துப் பெருமக்களையும் செந்தமிழ்க் கல்லூரி முதன்மையர் முனைவர் க. சின்னப்பா அவர்கள் இன்முகத்துடன் வரவேற்றார். மாட்சிமை தங்கிய முகவை மன்னர், மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர் நா. குமரன் சேதுபதி அவர்கள் பெருவிழாவைத் தலைமையேற்று, தம் தலைமையுரையை மிகச் சிறப்புடன் வழங்கினார். முன்னிலை வகித்து, விழாவைச் சிறப்பித்த மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலாளர் திருமிகு இரா. அழகுமலை அவர்கள் வள்ளலின் தமிழ்ப்பற்றையும் தேசியம் மற்றும் சைவநெறி ஆழத்தையும் நினைவு கூர்ந்தார். முன்னிலை வகித்த செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திருமிகு இரா. குருசாமி அவர்கள் வள்ளல் பெருமகனார் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்த சூழலின் அருமையையும் பெருமையையும் சுட்டிக்காட்டி வள்ளல் அவர்களின் தொலைதூரச் சிந்தனையின் மேன்மையை வெளிப்படுத்தினார்.

அருளாசியுரையைத் துவக்கிய மதுரை ஆதீனம் 292வது அவர்கள் தமிழ்மொழி சீரும் சிறப்பும் பெறுவதற்கு வள்ளல் அவர்கள் முயன்றமையையும், சைவமடங்களின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் பாலவநத்தம் ஜமீன் அவர்கள் தமிழுணர்வுடன் செயலாற்றியதைப் போற்றியுரைத்தார். சேதுபதி பரம்பரையினர் சைவத் தொண்டையும் அருட்கொடையையும் சிறப்புற வழங்கியமையைக் குறிப்பிட்ட மதுரை ஆதீனம் 292வது குருமகாசன்னிதானம் அவர்கள் வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் கலையரங்கம் கட்டிடப்பணி நிறைவுபெற வேண்டும் என்று வாழ்த்தியருளினார்கள். அதற்காகத் தாம் உரூபா ஒரு இலட்சம் தருவதாக உறுதியளித்தார்கள். தம் அறிக்கையைத் தொடர்ந்து, மேலும் நன்கொடை வழங்குவார்கள் என்றும், கட்டிடம் சிறப்புற மேன்மையாகவும் பொலிவுடனும் பூர்த்தியடையும் என்றும் அருளுரையில் வாழ்த்தினார்கள்.

திருக்கயிலாயப் பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் அவர்கள் தம் அருளாசியுரையில், வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களுக்கும் சைவ சமய மடங்கள் அனைத்திற்கும் உரிய தொடர்பினைச் சிறப்பித்து வாழ்த்தினார்கள். வள்ளல் அவர்களும் அவர்தம் சகோதரர் பாஸ்கரசேதுபதி அவர்களும் ஆன்மிகத்தை உலக அளவில் பரப்பிய விவேகானந்தருக்குத்

துணை நின்றமையை வியந்து பாராட்டினார்கள். தமிழ்மொழி வளர்ச்சிக்கும், இலக்கியப் பதிப்பிற்கும், தமிழாய்வுக் களத்திற்கும் வள்ளல் அவர்கள் அடிக்கல் நாட்டியதையும் சிறப்புற கோபுரமாய் மொழியைப் பெருமையடையச் செய்தமையையும் அனைவருக்கும் வலியுறுத்தி உரைத்தார்கள். மதுரை ஆதீனம் அவர்கள் வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவர் கலையரங்கம் பூர்த்தியடைவதற்கு நன்கொடை அறிவித்தமையைத் தொடர்ந்து, தாமும் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் அளிப்பதாகவும் அதற்குத் தொடக்கமாக விழா அரங்கிலேயே பத்தாயிரம் அளிப்பதாகவும் உரைத்து முன்தொகை வழங்கினார்கள். மேலும், தமிழ்மொழியைக் கற்று, கல்லூரியளவில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர் ஒருவருக்கு ஆண்டு தோறும் உருபா 5000/- வழங்குவதாகவும் மற்றும் ஏழை மாணவர் இருவருக்கு ஆண்டுதோறும் கல்வித் தொகை வழங்குவதாகவும் அறிவிப்பு நல்கினார்கள். திருவாவடுதுறை *ஆதீனத்தின் மதுரைக் கிளையினரை உடனடியாக அவர்தம் அறிவிப்பைச்* செயல்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். சைவநெறி பரப்பிவரும் குருமகாசன்னிதானம் அவர்கள் தமிழ்மொழியையும், தமிழ்மொழி பயிலும் மாணவ, மாணவியரையும் ஊக்குவித்து தம் அருளாசியை வழங்கினார்கள்.

தொடர்ந்து அருளாசி வழங்கிய தருமை ஆதீனம் 26வது குருமகாசன்னிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் வள்ளல் பரம்பரையினரின் தெய்வத் தொண்டையும், சைவத் தொண்டையும் சிறப்பித்து உரைத்தார்கள். தருமை ஆதீனத்திற்கும் சேதுபதி அரசக் குடும்பத்தினருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பையும், தொல்காப்பியம் முதலாக மணிமேகலை, கம்பராமாயணம் போன்ற காப்பியங்களும் வாழ்க்கை நெறிகளை உரைக்கும் திருக்குறள் *போன்ற அறநூல்களையும் பதிப்பித்து தமிழ்மொழிக்கு உயிரூட்டியமையைப்* போற்றிப் புகழ்ந்துரைத்தார்கள்.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அருளாசி வழங்கும் போது, வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்கள் அவதரித்த 1867இலிருந்து மறைந்த 1911 வரை தமிழகத்தில் வாழ்ந்த புலவர்கள், அறிஞர்கள், பதிப்பாசிரியர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் ஆகிய அனைவரும் வள்ளல் அவர்களால் ஆதரிக்கப்பட்டார்கள் என்ற கருத்தை மொழிந்தார்.

மேலும் பழம்பெரும் பாண்டிய மன்னர்களின் வீரம், விவேகம், தமிழ்க்காதல், பக்தி முதலிய அனைத்துப் பெருமிதப் பண்புகளும் செறிந்த தமிழ்ப்புரவலர், தமிழ்ப்புலவர் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களாவர் என்று புகழாரம் சூட்டியதோடு மட்டுமல்லாமல் வள்ளலின் முன்னோர்களாகிய சேதுமன்னர்கள், ஸ்ரீகாசிமடம் தொடங்கியது முதலாக இம்மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அறங்கள் பல ஆற்றியமையை நினைவு கூர்ந்து, சேதுமன்னர்கள் ஆற்றிய செந்தமிழ்ப் பணியைத் தொடரும் அனைவரும் சிறந்து வாழ்வாங்கு வாழ்க என்று வாழ்த்தி உரை வழங்கியருளினார்.

அருளாசியின் நிறைவுரையாக அருள் வழங்கிய காமாட்சிபுரி ஆதீனம் அவர்கள் வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்கள் சைவநெறியைத் தழைத்தோங்கச் செய்தமையைச் சுட்டிக்காட்டினார். மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு ஆட்சிபுரிந்த சேதுபதி மன்னர்களும் அவர்கள் தம் கல்வி நிறுவனங்களும் சைவசமயத்தையும், சைவமடத்தையும் வளர்த்ததாகவும், இன்று கல்வி நிறுவனங்களுக்குச் சைவமடங்கள் உறுதுணை வழங்கவேண்டிய நிலை உள்ளது என்றும் குறிப்பிட்ட காமாட்சிபுரி ஆதீனம் அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கக் கட்டடப்பணிகளுக்குத் தம் முழு ஆதரவை நல்குவதாகக் குறிப்பிட்டார்.

வள்ளல் பொன் பாண்டித்துரைத்தேவர் நூற்றாண்டு நினைவுப் பெருவிழா நிகழ்ச்சித் தொடக்கவிழா மேடையரங்கில் மதுரைத் தமிழ்ச்சங்கக் குழுவினரோடு தமிழகத்துச் சைவ மடங்களின் குருமகாசன்னிதானங்கள் வீற்றிருந்த காட்சி பூவுலகக் கயிலாயக் காட்சியாகத் தோன்றியது. இரவின் இருளை நீக்கும் வண்ணம் கதிரவன், தன் செங்கதிரைப் பரப்புவதில் ஏற்படுத்தும் செவ்வானக் கோலத்தை நினைவுறுத்தியது. தியாகத்தின் குறியீடாகத் திகழும் காவி வண்ணம் நிறைந்து, அரங்கமே சைவத்திருக் கோலமாகக் காட்சியளித்த தன்மை காண்போர் அனைவரையும் மெய்சிலிர்க்கச் செய்தது. திருக்கோவிலின் உள்ளேயும், பிரகார வெளிப்பகுதியிலும் நிலவுகின்ற அமைதியும், நிம்மதியும், இறையருளும் கலந்த பேரானந்த உணர்வு, 02.12.2011 அன்று மதுரைத் தமிழ்ச்சங்க வளாகம் முழுமையும் நிலவியது. அவனருளாலே அவன் தாள் வணங்குதல்

என்பது சைவ சமய உண்மை. அதன் நீட்சியாக வள்ளல் அவர்களின் அருளாலே சைவ ஆதீனங்களின் அருளாசி கிடைக்கப்பெற்றது என்று பெருவிழாவில் பங்குபெற்ற ஒவ்வோர் அன்பர்களும் புளகாங்கிதம் அடைந்தார்கள்.

நூற்றாண்டு நினைவுப் பெருவிழா நிகழ்ச்சியை மங்கள விளக்கேற்றித் தொடங்கி வைப்பதற்கு ஒப்புதல் நல்கிய தமிழகக் கூட்டுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு செல்லூர் ராஜு அவர்களும், மதுரை மாநகரத் தந்தை வணக்கத்திற்குரிய வி.வி. இராசன் செல்லப்பா அவர்களும் பெருவிழாவில் பங்கேற்று மங்கள விளக்கேற்றினர். அவர்களுடன் வணக்கத்திற்குரிய மதுரை மாநகர துணை மேயர் அவர்களும், உள்ளாட்சி மன்ற உறுப்பினர் குழாமுடன் கலந்து கொண்டு பெருமையும் பெருமகிழ்வும் நல்கினர். மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களும், மேயர் அவர்களும் தம் உரையில் வள்ளலின் பெருமையை நினைவுகூர்ந்து வாழ்த்தினார்கள்.

உணவு இடைவேளை நேரம் நெருங்கும் போது குழுமியிருந்த அனைவரும் வள்ளல் அவர்களின் நினைவலைகளிலே மூழ்கியிருந்தனர். நண்பகல் உணவு வேளைக்குப் பிறகு, மிகச் சரியாக 2 மணிக்கு மாணவ - மாணவியரின் கலைநிகழ்ச்சி துவங்கியது. வள்ளலின் தமிழ்ப்பணியை வெளிப்படுத்தும் வகையில் வள்ளலின் பெருமைகளைப் புலப்படுத்துகின்ற மதுரைத் தமிழ்ச்சங்க நிறுவனர் வாழ்த்துப்பாடல், வள்ளலின் மேன்மையை வெளிக்காட்டும் இசைப்பாடல்கள், பரதநாட்டியம், கோலாட்டம், நாட்டுப்புற நடனம் ஆகியவற்றிற்குச் செந்தமிழ்க் கல்லூரியில் பயிலும் மாணவ - மாணவியர் நடனமாடினார்கள். கலை நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பாக வள்ளல் அவர்களின் பிறப்பு முதலான வாழ்க்கை வரலாற்றைப் புகழ்ந்துரைக்கும் முகமாக வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நிகழ்த்தப் பெற்றது. அனைத்துக் கலை நிகழ்ச்சிகளும் வள்ளல் அவர்களின் சிறப்பை மையப் பொருளாகக் கொண்டு விளங்கியதுடன் கலைநயத்துடன், அழகுணர்வுடனும் அமைந்தமையை அனைவரும் கண்டு பரவசம் அடைந்தார்கள். செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் மு. மீனா அவர்களும் உதவிப் பேராசிரியர் திருமதி. ஜெயந்தி நாகராஜன் அவர்களும் ( சுயநிதிப்பிரிவு ) கலைநிகழ்ச்சிகளுக்கும் மாணவ - மாணவியருக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளித்தனர்.

கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவரும் தமிழும் என்ற பொருண்மையில் வாழ்த்து அரங்கம் நடைபெற்றது. வாழ்த்தரங்கத்தைத் தமிழகத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவரும், செந்தமிழ்க் கல்லூரிச் செயலரும் ஆகிய திருமிகு இரா. குருசாமி பி.ஏ. அவர்கள் தலைமையேற்றுத் தொடங்கி வைத்தார்.

வரவேற்புரை நல்கிய தமிழகத் தமிழ்ச்சங்க ஒருங்கிணைப்பாளர் திரு. மு. நாகேஸ்வரன் அவர்கள் செம்மொழியாம் தமிழ்மொழிக்கு மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆற்றிய தமிழ்த் தொண்டினை வெளிக்காட்டி உரைத்தார். தமிழககத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு, உலகத்திருக்குறள் பேரவை, உலகத் திருக்குறள் மையம், இராமநாதபுரம் தமிழ்ச்சங்கம் என்று தமிழகத்திலுள்ள சிறந்த நிலையில் செயலாற்றிவருகின்ற அனைத்துத் தமிழ்ச்சங்கங்களும் தமிழ் அமைப்புகளும் ஒருங்கு கூடியிருந்ததைத் தமிழ்ச்சங்கங்களின் சங்கமம் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார். மேலும் இவ்வாறான சிறப்பு நிகழ்விற்குக் காரணமாக அமைந்த தமிழகத் தமிழ்ச்சங்கக் கூட்டமைப்புத் தலைவர் திருமிகு இரா. குருசாமி அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இவரைத் தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய தமிழகத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்புச் செயலாளராகிய கோவை கூல வாணிகர் இரா.சொ. இராமசாமி அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய வள்ளல் அவர்களின் சீரிய தொண்டினை நினைவு கூர்ந்தார். பாலவநத்தத்து அரண்மனையையே கொடுத்த வள்ளல் அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தொடங்கியதைப் பெருமிதத்துடன் எடுத்துரைத்தார்.

கோபிச்செட்டிப் பாளையம் உலகத் திருக்குறள் பேரவையின் நிறுவனர் முனைவர் கா. அரங்கசாமி அவர்களும், மதுரை உலத்திருக்குறள் பேரவையின் பொதுச் செயலாளர் திருமிகு ந. மணிமொழியன் அவர்களும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சீரிய பணியை வியந்து பாராட்டினார்கள். திரு. மணிமொழியன் அவர்கள் பெருவிழாவில் பங்கேற்ற பெருமகனார்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தார்.

இராமநாதபுரம் தமிழ்ச்சங்கத்துத் துணைத் தலைவர் திரு.மு.ச. கருணாநிதி அவர்கள் லைச நெறியை உலகெங்கும் பரப்பியும் அண்ணல் விவேகானந்தர் அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பிய பெருங்குணத்தையும், சேதுபதி பரம்பரையினர் சைவத் தொண்டு மற்றும் தமிழ்த் தொண்டாற்றிய மேன்மையையும் எழுத்தியம்பினார். வாழ்த்துரை நல்கிய மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழுப் பேரவை உறுப்பினர் திருமிகு சு. வீரணசாமி அவர்கள் வள்ளல் அவர்களின் சிறப்பை எடுத்துரைத்து, அன்னாரின் வாழ்க்கை இக்கால இளைஞர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்வதைச் சுட்டிக்காட்டினார்.

பெருவிழாவிற்கு வருகைபுரிந்த சைவ ஆதீனங்களின் குருமகாசன்னிதானங்கள், தமிழகத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பினர் சைவநெறி ஆர்வலர்கள், அரசுத்துறை சார்ந்த பெருமக்கள், வள்ளல் நெறியைப் பின்பற்றும் அன்பர்கள், தமிழ் ஆர்வலர்கள், மதுரை மாநகரப் பெருமக்கள், மதுரைத் தமிழ்ச்சங்கம் மற்றும் செந்தமிழ்க் கல்லூரி அன்பர்கள், செய்தி தொடர்பாளர்கள் மற்றும் வருகை புரிந்த அனைவருக்கும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பாக ஆட்சிக்குழு உறுப்பினர் க. முத்தையா பசும்பொன் அவர்கள் நன்றி நவின்றார்.

விழா நிறைவுறும் பொழுது அனைவரின் எண்ணங்களிலும் வள்ளல் பெருமகனாரின் அருஞ்செயல்களின் மேன்மையே இடம்பெற்றிருந்தது. வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்களின் அருளும் ஆசியும் அனைவருக்கும் கிடைக்கப்பெற்றதை ஒவ்வொரு பங்கேற்பாளர்களும் உணர்ந்தனர், வியந்தனர், மகிழ்ந்தனர்.

தண்ணொளி வீசும் முழுநிலவு போல வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் நூற்றாண்டு நினைவுப் பெருவிழா சிறப்புற முழுமைபெற்று நடந்தேறியது. சிவநெறிச் செல்வர் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் நூற்றாண்டு நினைவு விழா அழைப்பிதழில் குறிப்பிடப்பெற்ற பங்கேற்பாளர்கள் அனைவரும் தவறாது வருகைபுரிந்து சிறப்பித்தமையே வள்ளல் பெருமகனாரின் மேன்மையையும், உயர்வையும், தெய்வத்தன்மையையும் வெளிக்காட்டுவதாக உள்ளது என்று அனைவரும் உள்ளப் புளகாங்கிதம் அடைந்து வியந்தனர்.

பாடலோசையும் கண்ணொலி யோசையும்
ஆடலோசையும் மார்ப்பொலி யோசையும்
ஓடை யானை யுறற்றொலி யோசையும்
ஊடு போயுயர் வானுல குற்றவே
என்று இராசமாபுரத்து இளவேனிற்
பருவத்தே நிகழும் கடலாடு விழாவின்போ
எழுந்த ஓசை, பூவுலகு தாண்டி
வானுலகை அடைந்ததைப் போல
மதுரைத் தமிழ்ச்சங்கத்து வளாகத்தில் நிகழ்ந்த பெருவிழாப்
பேரின்பு உணர்வுகள், சுவர்க்கத்தே
கோலோச்சி கொண்டிருக்கும் நம்
வள்ளல் பெருமானின் திருவடிகளைச்
சென்றடைந்திருக்கும் என்ற உணர்வோடு
விழா இனிதே நிறைவுற்றது.

தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி தமிழ்மொழிக்கும் கலங்கரை விளக்கமாய்த் திகழும் சிவநெறிச் செல்வர் வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் அவர்களின் புகழ் வையகம் உள்ள மட்டும் வாழ்க ! என்று துதிப்போமாக.

மதுரைநகர் மக்களுக்கு மாத்தமிழ் இதயமாகும்
மக்களுக்கு உயிருமாகும் ! ஆதலினால் மாண்புடன்
மதுரைநகர் மட்டுமின்றி மாநிலமே வாழ்ந்திட
மதுரையிலேதமிழுக்குச் சங்கத்தை நிறுவினார் !
சதுரர்திரு பொன். பாண்டித்துரைத்தேவர் ! நினைவு
சாலவுமே போற்றியின்றே நூற்றாண்டில் நிற்கின்றோம் !
கதிரொளிபோல் விழாக்காணும் இவ்வேளை வாழ்த்த
கடமையுடன் எழுந்தருளி வந்துள்ளார் !

(மதுரைத் தமிழ்ச்சங்க விழாக்குழுவினர் கவிதை)

அனைவருக்கும் நன்றியுரித்தாகுக.

# வாசகர் வாசகம்

1

அன்புடையீர்,

வணக்கம். நவம்பர் 2011 செந்தமிழ் இதழில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் என்றழைக்கப்படும் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் வாழ்வும் வாக்கும் குறித்து வெளியான கட்டுரையின் தொடர்பாக சில செய்திகளை தங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டி இக்கடிதத்தை எழுதுகிறேன்.

அக்கட்டுரையில் சண்முகக் கவசம் பாடல்களை திருநீறு அணிந்து கொள்ளுதல் முதலியவைகள்,விதிமுறையாக கூறப்பட்டுள்ளது. சண்முகக் கவசம் பாட திருநீறு அணிய வேண்டியதில்லை. ஏன் சுவாமிகளே திருநீறு அணியாதவர் தானே ! காசி மடத்தில் கொடுத்ததால், காவியாடையையும், சிதம்பரத்தில் சிவசிதம்பரம்பிள்ளை அணிவித்ததால் உருத்திராக்க மாலையும் அணிந்தவர். அகத்துறவை விட புறத்துறவு வேண்டாம் என்பதை கொள்கையாய் கொண்டவர். இப்பாடல்களைப் படிப்பது குறித்து சுவாமிகள் கூறியதாவது : இதனை வாற்சல்லிய விசுவாசத்துடன் நாளொன்றுக்கு ஆறுமுறை படிப்பவர்கள் எத்தகைய துன்பங்களின்றும் விடுதலையுறுவார்கள். முடிவில் முக்தியும் அடைவார்கள். இக்கவசச் செய்யுள்களும் சிலவற்றை விட்டு சிலவற்றை கூறலும் இடையில் எவரோடேனும் பேசலுங் கூடாது. முன்பின் மாறிப்படித்தலும் கூடாது. இதுவே சுவாமிகள் கூறிய வழிமுறைகள். இப்பாடல்களை நடக்கும் போதும் பயணம் செய்யும் போதும் விழிக்கும் போதும், படுக்கும் போதும் எந்த இடத்திலும் படிக்கலாம். இது தவிர சுவாமிகள் செந்தமிழுக்குச் செய்த தொண்டுகள் பல. சண்முகக் கவசப் பாடல்களே முதல் 12 பாடல்கள் உயிர் எழுத்திலும் மீதி 18 பாடல்கள் உயிர்மெய் எழுத்திலும் ஆரம்பித்து உயிரையும் மெய்யையும் காக்க பாடப்பட்டவைகள் ஆகும்.

மேலும் 1900 ஆண்டுகளில் தனித் தமிழ் இயக்கம் தோன்றிய போது, தனித் தமிழிலே 50 பாடல் இயற்றி அவற்றிற்கு சேந்தன் செந்தமிழ் எனப் பெயரிட்டார். இந்நூலின் மற்றுமொரு சிறப்பு, தமிழிலே வழங்கிவரும் வடமொழி சொற்களை பொருள் கூறி பட்டியலிட்டதுடன், வடமொழி – தமிழ் அகரமுதலி இயற்றி இந்நூலுடன் வெளியிட்டுள்ளார். இந்நூல் தமிழறிஞர்கள் கட்டாயம் படிக்கவேண்டியதாகும். முடிவாக கூடத்து விளக்காய் இருந்த ஸ்ரீமத் பாம்பன் சுவாமி அவர்களின் வாக்கினை கோபுர விளக்காய் ஆக்கியுள்ள இக்கட்டுரை அருமை. இதனை எழுதியவர்க்கும் வெளியிட்ட தங்களுக்கும் குருவருள் கிடைக்கும்.

பலகோடி நன்றியும், வணக்கமும் பாம்பனார் பாதத்துளி.

ச. அருளானந்தர்
HMS காலனி, மதுரை

# நீளும் அவரின் நினைப்பு

தமிழாகரர் தெ. முருகசாமி, புதுச்சேரி

அண்ணா மலையாம் அருந்தமிழ்ப் பேராசான்
தண்ணார் தியாகராசர் கல்லூரிப் – பண்ணார்ந்த
நல்முதல்வர் என்னும் நனிபுகழ் பெற்றவர்தாம்
இல்லானார் தெய்வமாய் இன்று !

கடலாழம் போன்றவர் ! கன்னித் தமிழின்
உடலாக வாழ்ந்த உயர்ந்தோர் ! – மடலவிழ்ந்த
பூமணம் போலப் பொலிவித்தார் பன்னூற்குப்
பாமணை மான உரை !
அப்துல் கலாமின் அருந்தமிழ்ப் பாராட்டைத்
தப்பாமல் பெற்ற தமிழாசான் ! – இப்பாடல்
இமைமூடிச் சென்றாலும் எந்நாளும் அன்னார்
இமைபொழுதும் நீங்காரே நெஞ்சு !

எம்.ஜி.ஆர். சொன்ன உலகத் தமிழ்ச்சங்கம்
நம் மதுரை தன்னிலே கொண்டுவர – இம்முறை
ஆளவந்த அம்மாவும் மடலொன்றை
நீளவிட்டார் நாளேட்டில் தான் !

மதுரைத் தமிழ்ச்சங்க மாத இதழாம்
மதுரமிகு செந்தமிழ் மாண்பை – மதுரைமாய்
நாளும் பரப்ப நனிதுணை யாயிருந்தார்
நீளும் அவரின் நினைப்பு !

# மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்



## சிவநெறிச் செல்வர் வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர்

## நூற்றாண்டு நினைவுப் பெருவிழா அழைப்பிதழ்



இனியு மோர்தமிழ்ச் சங்கம் காண்பேன்
இருந்த முதலிடை கடைச்சங்கம் போலவே
எனச்சொன்ன பாண்டித்துரைத் தேவன் சொல்லை
இவ்வையம் அந்நாளில் நம்பவே இல்லை !

வியந்தது வையம் சென்றநாள் சிலவே
விரிந்தது மதுரைத் தமிழ்ச்சங்க நிலவே
அயர்ந்த தமிழரின் ஆடலும் பாடலும்
அறிவின் செயலும் மிளிர்ந்தன பலவே !

புலவர் வகுப்பு மூன்று படைத்தான்
புன்மையின் மடமையின் என்பை உடைத்தான்
பலதமி ழிலக்கிய மாசு துடைத்தான்
பாண்டித் துரைத்தேவன் புகழ்க்கொடி எடுத்தான்

- பாவேந்தர் பாரதிதாசன் (தேனருவி)

பேரன்புடையீர்,

வணக்கம். நிகழும் திருவள்ளுவராண்டு 2042 கார்த்திகைத் திங்கள் 16ஆம் நாள் (02.12.2011) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி அளவில் **மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தில் சிவநெறிச் செல்வர் வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்களின் நூற்றாண்டு நினைவுப் பெருவிழா** சிறப்பாக நடைபெற இருக்கிறது. தமிழ் அறிஞர்கள், உணர்வாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவண்
**மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம்**
மதுரை

## வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர்
## *நூற்றாண்டு நினைவுப் பெருவிழா நிகழ்ச்சி நிரல்*

இடம் : மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அருள் வளாகம்

நேரம் : முற்பகல் 10.00 மணி

| | | |
|---|---|---|
| இறைவணக்கம்<br>நிறுவனர் வாழ்த்து | : | **தருமையாதீன இசை மணிகள்** |
| மங்கள விளக்கேற்றி<br>விழாவைத்<br>தொடங்கி வைப்பவர்கள் | : | மாண்புமிகு<br>**செல்லூர் கே. ராஜு** அவர்கள்<br>தமிழகக் கூட்டுறவுத்துறை அமைச்சர் |
| | | மதுரை மாநகரத் தந்தை வணக்கத்திற்குரிய<br>**வி.வி. இராசன் செல்லப்பா** அவர்கள் |
| தலைமை | : | மாட்சிமைதங்கிய மன்னர்<br>**நா. குமரன் சேதுபதி** அவர்கள்<br>தலைவர், மதுரைத் தமிழ்ச்சங்கம் |
| | | **திருமதி. இராணி. லெட்சுமிநாச்சியார்** அவர்கள்<br>துணைத் தலைவர், மதுரைத் தமிழ்ச்சங்கம் |
| முன்னிலை | : | **திருமிகு. இரா. அழகுமலை** அவர்கள்<br>செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம் |
| | | **திருமிகு. இரா. குருசாமி** அவர்கள்<br>செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி |
| வரவேற்புரை | : | **முனைவர். க. சின்னப்பா** அவர்கள்<br>முதன்மையர், செந்தமிழ்க் கல்லூரி |
| அருளாசியுரை | : | **திருக்கயிலாயப் பரம்பரை<br>திருவாவடுதுறை ஆதீனம்<br>23வது குருமகாசன்னிதானம் சீர்வளர்சீர்<br>சிவப்பிரகாசதேசிக பரமாச்சாரிய<br>சுவாமிகள்** அவர்கள் |

தருமை ஆதீனம் 26வது
குருமகாசன்னிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

மதுரை ஆதீனம் 292வது
குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ
அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த
தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

கயிலை மாமுனிவர் திருவளர்திரு
காசிவாசி திருப்பனந்தாள்
குருமகாசன்னிதானம் முத்துக்குமாரசுவாமி
தம்பிரான் சுவாமி அவர்கள்

காமாட்சிபுரி ஆதீனம்
அங்காள பரமேஸ்வரி சித்தர்பீடம்
மகா சமஸ்தானம்
ஸ்ரீலஸ்ரீ சிவலிங்கேசுவர சுவாமிகள் அவர்கள்

## வாழ்த்து அரங்கம்

*வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரும் தமிழும்*

பிற்பகல் 2.00 மணி

| | | |
|---|---|---|
| தலைமை | : | **திருமிகு. இரா. குருசாமி** அவர்கள்<br>தலைவர், தமிழகத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு |
| வரவேற்புரை | : | **மு. நாகேஸ்வரன்** அவர்கள்<br>தமிழ்ச்சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர் |
| வாழ்த்துரை | : | **கோவை கலை வாணிகர்**<br>**திருமிகு. இரா.சொ. இராமசாமி** அவர்கள்<br>செயலாளர், தமிழகத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு<br>**முனைவர் பா. வளன் அரசு** அவர்கள்<br>உலகத் திருக்குறள் மையம், பாளை<br>**முனைவர் கா. அரங்கசாமி** அவர்கள்<br>உலகத் திருக்குறள் பேரவை, கோபி |

**திருமிகு. மு.ச. கருணாநிதி** அவர்கள்
இராமநாதபுரம் தமிழ்ச்சங்கம்

**திருமிகு. இளமாற அடிகள்** அவர்கள்
ஆசிரியர் – தமிழ் அறம்

**திருமிகு. ந. மணிமொழியன்** அவர்கள்
பொதுச்செயலாளர், உலகத் திருக்குறள் பேரவை

**திருமிகு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக்** அவர்கள்
மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிப்பேரவை

**திருமிகு. சு. வீரணசாமி** அவர்கள்
மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிப்பேரவை

நன்றியுரை : **திருமிகு. க. முத்தையா பசும்பொன்** அவர்கள்
மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிப்பேரவை

❋ முற்பகல் 8.00 மணி
மதுரை திருக்கோவில் கடைச் சங்கப்புலவர் வழிபாடு
தருமை ஆதீனப்புலவர் தா. குருசாமிதேசிகர்

❋ முற்பகல் 9.00 மணி
வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்.

மாணவர்கள் கலைநிகழ்ச்சி
ஆக்கமும் ஊக்கமும்

**முனைவர். மு. மீனா** அவர்கள்
முதல்வர் (பொ.) செந்தமிழ்க் கல்லூரி

**திருமதி. ஜெயந்தி நாகராசன்** அவர்கள்
உதவிப் பேராசிரியை, செந்தமிழ்க் கல்லூரி

## தங்கள் வருகையை விரும்பும்

❋ தமிழ்ச்சங்க ஆட்சிப்பேரவை

❋ செந்தமிழ்க் கல்லூரிக் கல்விப்பேரவை

# போடிநாயக்கனூரில் வடக்கு வாய் செல்வியாக கண்ணகி

என். ஆசாதேவி
அ.தெ.ம.ப.

போடிநாயக்கனூர் தற்போதைய தேனி மாவட்டத்தின் ஒரு பகுதி. போடிநாயக்கனூர் பல்வேறு வரலாற்றுப் பதிவுகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது. அவற்றில் சில, இவ்வூரைச் சுற்றியுள்ள மீனாட்சிபுரம், கோடாங்கிபட்டி, அம்மாபட்டி, பெருமாள்கவுண்டன்பட்டி, நாகலாபுரம், டொம்புச்சேரி ஆகிய பகுதிகளில் கற்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இடைக்கால தமிழக வரலாற்றில் இடம்பெற்றுள்ள இடங்களில் இதுவும் ஒன்று. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் சங்க காலத்தில் கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. 1950ஆம் ஆண்டு இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் 1500 வெள்ளி காசுகள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்காசுகள் சங்ககால பாண்டியர்கள் காலத்தை ஒத்ததாக கூறப்படுகிறது. சங்க காலத்தில் இப்பகுதி அளநாடு என்ற பிரிவுகளின் கீழ் செயல்பட்டு வந்துள்ளது. சடயவர்ம வீரபாண்டியனின் கல்வெட்டு 1914இல் கொட்டகுடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்கூறியவற்றின் மூலம் இப்பகுதி பாண்டியர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததை உணரமுடிகிறது. தமிழ்க் கவிஞன் பாரதியாரால் இவ்வூர் பச்சையூர் என்றும் பாடப்பட்டுள்ளது. ஐந்து நதிகள் இவ்வூரில் பாய்ந்ததால் பஞ்சநதி எனவும் பண்டைய காலத்தில் அழைக்கப்பட்டுள்ளது. இப்பகுதி திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு உட்பட்ட மலைப்பகுதியில் அமைந்துள்ளது. திருவாங்கூர் பகுதிகளில் இருக்கும் மக்களுக்கு இவ்வூரிலிருந்து பொருட்கள் மலைப்பகுதி வழியாகக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய சிறப்புகளுடன் இங்கு கண்ணகி வழிபாடும் முக்கியச் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. போடிநாயக்கனூர் மலைப்பிரதேசங்களால் சூழப்பட்ட பகுதி. இங்கு குரங்கனிக்கு செல்லும் வழியில் அமைந்துள்ள கொட்டகுடிப்பகுதியில் முதுவாக்கர் என்ற மலைவாழ் மக்களால் கண்ணகி "வடக்கு வாய்ச்சி அம்மன்" என்ற பெயரில் வணங்கப்படுகிறாள். இங்கு உள்ள கோயிலில் மிகவும் எளிய தோற்றத்துடன்

கூடிய காளியை நினைவூட்டும் வகையில் ஒரு சிலை அமைந்துள்ளது. இச்சிலையை கண்ணகியாக முதுவாக்கர் இன மக்கள் வணங்குகின்றனர். இக்கோயில் சிலப்பதிகாரக் கதையுடன் தொடர்புடையது. கோவலன் கொலையுண்ட பிறகு பாண்டிய மன்னனுடன் வாதம் புரிந்து கோவலன் கள்வன் அல்ல என்பதை நிரூபித்து மதுரையை எரித்த கண்ணகி பல இடங்கள் கடந்து சென்று கோவலனுடன் வானுலகில் ஒன்று சேர்ந்தாள் என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளார். தற்போது தமிழக அரசுக்கும் கேரளாவுக்கும் இடையே பிரச்சனையை கிளப்பும் கண்ணகி கோயில் அமைந்துள்ள இடத்தை அடைய கண்ணகி போடிநாயக்கனூர் வழியாக சென்றிருக்க வேண்டும். மலைகளால் சூழப்பட்ட போடிநாயக்கனூர் பகுதி ஜமீன்தார்களின் ஆட்சிக்கு முன்பு வரை கேரள திருவாங்கூர் அரசின் கீழ் இருந்திருக்கிறது. எனவே, அவ்வாறு சென்ற கண்ணகிக்கு அங்கு வாழ்ந்த மக்களால் எழுப்பப்பட்டதே போடிநாயக்கனூர் கொட்டகுடியில் உள்ள கோயில் ஆகும். அவ்வாறு அமைக்கப்பட்ட கோயிலில் உள்ள சிலை காளி தெய்வத்தை நினைவுப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. அச்சிலை கோபத்துடன் காளி தெய்வம் வடக்கு நோக்கி அமர்ந்து உள்ளதைப் போல காணப்படுகிறது. P.L. சாமி தனது தமிழ் இலக்கியத்தில் தாய்தெய்வ வழிபாடு என்ற புத்தகத்தில் காளி வழிபாடு கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடையது என்று கூறியுள்ளார். மேலும், தமிழ்நாட்டில் காளியை வடக்கு வாய்செல்வி என்று அழைக்கப்பட்டுள்ளாள் என்று கூறியுள்ளார். இவ்வாறு வடக்கு வாய் செல்வியாகவும், காளியாகவும் முதுவாக்கர் என்ற மலைவாழ் மக்களால் இன்றும் கண்ணகி வணங்கப்படுகிறாள். வடக்கு வாய் செல்வி என்பதே நாளடைவில் வடக்கு வாய்ச்சி என்று மக்களால் அழைக்கப்பட்டிருக்கலாம். மேலும், இதை உறுதி செய்யும் விதமாக 1014ல் எழுதப்பட்ட கல்வெட்டு இக்கோயிலுக்குச் செல்லும் வழியை காட்டும் விதமாக அமைந்துள்ளது. இக்கல்வெட்டு பாண்டிய மன்னன் வீரபாண்டியனால் உருவாக்கப்பட்டது.

முதுவாக்கர் இன மக்களால் ஆண்டு தோறும் சித்திரை மாதம் இங்கு சிறப்பான வழிபாடு நடத்தப்படுகிறது. பெண்கள் இக்கோவிலை இன்று வரை கடந்து சென்றது இல்லை. ஆனால், திருமணம் ஆகாத பெண்கள், விதவை பெண்கள் இக்கோவிலுக்குச் செல்லலாம். ஆனால், திருமணமான பெண் இக்கோவிலுக்குச் செல்ல மறுக்கப்படுகிறார்கள். வழிபாட்டு பூஜைகளை இரண்டு ஆண்கள் மட்டுமே செய்வர், மற்றவர்கள் சந்நிதிக்குள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. பத்தினி தெய்வமான கண்ணகி முதுவாக்கர் என்ற மலைவாழ் மக்களால் “வடக்கு வாய்ச்சி” என்ற பெயரில் போடிநாயக்கனூர் மலைப்பகுதிகளில் இன்றும் வணங்கப்படுகிறாள்.

# ஐங்குறுநூறு மருதம் உணர்த்தும் தேசியம்

பா. வாணிஸ்ரீ
மதுரை

## முன்னுரை

மனித இனம் தோன்றிய காலத்தில் நாடுகளும், அரசுகளும் தோற்றம் பெறவில்லை. காலப்போக்கில் மனிதனால் இவை அனைத்தும் தோற்றுவிக்கப்பட்டன. இனக்குழுச் சமூகமும், நாகரிகமும் காலங்கள் வளர வளர மனிதனின் சிந்தனைப் போக்குகளும் எண்ணங்களும் வளரத் தொடங்கின. இந்த வளர்ச்சியின் விளைவுகள் தான் குடும்பம், குழு, அரசு, அரசன் எனப் பல்வேறு சமூக நிறுவனங்களை உருவாக்கிக் கொண்டான். இதற்குள் நாடு, மொழி, சமயம், பண்பாடு, பழக்கவழக்கம் என தனக்கான வாழ்வியல் நெறியை வளர்த்துக் கொண்டான். இந்த ஒழுங்கிலிருந்து தோற்றம் பெற்றுதான் தேசியத்தின் பொருளும் வரையறைகளும் கூடக் காலத்திற்குக் காலம் மாறுபட்டுக் கொண்டிருக்கிறது. பண்டைக் கால இலக்கியமான ஐங்குறுநூறு வழியாக நாம் அறிய இயலும் தேசியம் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது. அவற்றில் ஐங்குறுநூற்றின் மருத திணைப் பாடல்களில் முதலில் இடம் பெறும் வேட்கைப் பத்து என்ற பத்து பாடல்கள் மற்றும் தேசியம் பற்றிய கருத்துக்களை எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதை வெளிக் கொண்டு வருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### தேசம் - சொல்லாய்வு

"தேசம் என்பதற்கு இடம், உறையுள், கட்டளை, கூர்மை, நாடு, பங்கு, பிரபை என்று தமிழ்மொழி அகராதி விளக்கம் கூறுகிறது."

"தேசியத்தின் வித்து தேசமாகும். தேசம் என்பது 'தேஷ்' என்பதற்குரிய வடமொழிச் சொல்லாகும். இதன் அடிச்சொல் 'திஷ்' என்பதாகும். இதனுடன் இகரமும் அகரமும் இணைந்து 'ஏ' என்றாகி 'தேஷ்' என்று வந்துள்ளது" என வடமொழி ஆங்கில அகராதி விளக்கம் கூறுகிறது."

"தேசம் என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லான "Nation' என்பது நேசியோ (Natio) என்ற இலத்தீன் மொழிச் சொல்லை மூலமாகக்

கொண்டது. நேசியோ என்றால் 'பிறந்தது' அல்லது 'பிறந்த இடம்' என்பது பொருளாகும். இதன் வேர்ச்சொல் நேட்ஸ் நாடு என்னும் பொருளைக் கொண்டது" என்று கூறுகிறார் கு.ச. ஆனந்தன்.

'தேசியம்' என்பது ஒரு கலைச் சொல். இச்சொல் வழக்குச் சொல்லாகப் பயன்பட்டாலும், இதற்குரிய அடிப்படைக் கூறுகள் மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்தே இருந்து வருகின்றது. பழங்காலத்தில் ஏற்பட்ட குழுச்சமுதாய உணர்வுகளே தேசியத்தின் கூறுகள் எனலாம். குழுச் சமுதாயத்திற்குரிய அனைத்துப் பண்புகளையும் தேசியப் பண்புகள்கவும் கூறலாம்.

## தேசியம்

தேசியம் அல்லது தேசிய உணர்வு என்பது ஒவ்வொரு மனித சமுதாயமும் தனது நாகரீகத்தின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தனக்கென்று தனியான சட்டமுறைகளையும், அரசாங்க நிறுவனங்களையும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டுமென்ற கொள்கையை அல்லது உரிமையை எடுத்துக் காட்டும் உணர்வே ஆகும். என வாழ்வியல் களஞ்சியம் சுட்டுகிறது. ஒரு தேசியத்தால் நிறுவப்படும் அரசியல் சமூகம் என்பதே தேசியம் என மார்க்ஸ் அவர்கள் விளக்கம் தருகின்றனர்.

ஒவ்வொரு இன மக்கள் சமுதாயத்திற்கும், அவர்களின் பண்பாட்டிற்கும் என தனித்தனி பண்புகள் உண்டு. இது ஒரு நாட்டில் வாழும் பிற மக்களின் பழக்கவழக்கத்திற்கும் பண்பாட்டிற்கும் எனத் தனித்தனியான சுதந்திரமான சட்டங்களையும், அரசு நிறுவனங்களையும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். பலதரப்பட்டவர்களையும் ஒன்றிணைத்து அதன் கீழ் வாழுமாறு அமைத்து இருப்பதே ஒழுங்குமுறை என்ற இணைப்பாகும். இந்த இணைப்பினையே சட்டம் அல்லது தேசியம் என்ற வகையில் ஒன்றிணைக்கும் நிகழ்வாகும். அதன்கீழ் வாழும் மக்கள் அனைவரையும் ஒரு நாட்டினர் என்கிறோம். அந்த நாட்டில் வாழும் மக்களை தேசியம் என்கிறோம்.

## தேசிய உணர்வின் வளர்நிலைகள்

ஒரு குறிப்பிட்ட மக்கள் சமுதாயம் ஒரு பொதுவான நில அமைப்பில் வாழும் முறையை ஏற்றுக்கொள்ளும் போது நாம் யாவரும் அதில் வாழ்தல் வேண்டுமென்ற விருப்பத்தினால் அவர்கள் ஒற்றுமை உணர்வை வளர்ப்பார்கள். இந்த ஒற்றுமை உணர்வை வளர்க்கும் வேறு பல காரணிகள், அவர்கள் ஒரே தாய் மொழியைக் கொண்டிருத்தல், ஒரே சமய நெறியைப்

பின்பற்றுதல், ஒரே பண்பாட்டினைப் பேணுதல், ஒரே பண்டைய வரலாற்றைப் பெற்றிடுதல், பொதுவான போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல், ஒரே தன்மையான பொருளாதார நோக்கங்களைக் கொண்டிருத்தல் முதலியவற்றாலும் ஏற்படுதல் கூடும். தமக்கெனத் தனியாக அரசையும், சட்டங்களையும் பெறுதல் வேண்டும் என்ற அரசியல் உணர்வை அவர்கள் கொண்டிருத்தல். அதுவே அவர்களை ஒரு தேசியமாக இணைக்கும் வலுவான காரணியாகும்.

## மருதம் விளக்கம்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலமாகும்.

*"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"* (தொல் – அகம் – 951)

என இந்திரன் விரும்புகின்ற மிகுதியான நீரையுடையது மருத நிலம் ஆகும். நல்ல விளைச்சல் தகுதியுடைய விளைநிலத்தைக் கொண்டதும் மருத நிலமாகும் என மருதத் திணைக்கு விளக்கம் தருகிறார் தொல்காப்பியர்.

## தலைவியின் தேசப்பற்று

வேட்கைப்பத்து பாடலில் இடம்பெறும் தலைவி, தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்து பரத்தையிடம் சென்ற வருத்தத்தைக் கூறும்போது நாட்டு நலனையும், மக்கள் நலனையும் மட்டுமே கருதி வாழ்ந்து இருக்கிறாள் என்பதை அறிய முடிகிறது. மன்னனுடைய ஆட்சி சிறப்பாக அமைய அவள் இயற்கையை வழிபடுகிறாள். நாட்டின் பொருளாதாரம் குறைவு ஏற்பட்டு விடக்கூடாது என்பதனை

*நெல்பல பொலிக பொன்பெரிது சிறக்க*

*எனவேட் டோளே யாயே யாமே* (ஐங் – 1)

என எம் மன்னனாகிய அதன் அவனி பல்லாண்டுகள் வாழ்க எங்கள் நாட்டின் வயல்களில் நெல்வளம் சிறந்து விளங்க வேண்டும். நாட்டின் பொன் வளம் சிறந்து விளங்க வேண்டும் என்பதையே தலைவி விரும்பி வாழ்ந்தாள். அவளின் தோழியாகிய நானோ அரும்புகள் நிறைய உடைய காஞ்சியும் சினையை உடைய சிறுமீன்களும் நிறைந்த ஊரின் தலைவன் வாழ்க என்றும், அவனுக்குத் துணையாக விளங்கும் பாணனும் வாழ்க என்று இறைவனை வேண்டி விரும்பி வாழ்ந்து வந்தோம் என்ற தோழியின் கூற்று வாயிலாக தலைவியின் தேசப்பற்று அறியலாம்.

## மன்னரின் ஈகை

ஒருவன் சேர்த்து வைத்த செல்வத்தில் எல்லாம் சிறந்த செல்வம் எதுவென்றால் தாற் பெற் பொருளை பிறர்க்கு கொடுத்து அதைக் கண்டு தான் மகிழ்ச்சி கொள்வது. அத்தகைய பண்பு அன்றைய மன்னர்களிடம் இருந்துள்ளதை சங்க இலக்கியங்கள் படம் பிடித்து காட்டுகின்றன எனலாம். கடையெழு வள்ளல்கள் மற்றும் குமண வள்ளல் போன்ற மன்னர்களும் மற்றும் புலவர்களான பெருந்தலைச் சாத்தனார் இதர புலவர்களும் கொடுத்து உதவும் பண்பு உடையவர்களாக இருந்திருக்கின்றனர். பண்டைய பண்பாட்டில் ஈகை என்பது சமூக விழுமியமாகக் கருதப்பட்டது என்பதை இக்கருத்தால் அறிய இயலும். எனவே தான் தலைவர் மன்னனின் ஈகை செயல் இன்னும் சிறக்க வேண்டி

*விளைக வயலே வருக இரவலர்*

*எனவேட் டோளே யாயே யாமே* (ஐங் - 2)

எனக் கூறுகிறாள். ஈகையின் சிறப்பை உணர்ந்த வள்ளுவர்

*ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல*

*ஊதியம் இல்லை உயிர்க்கு* (குறள் - 231)

என்றுச் சுட்டிச் செல்கிறார்.

## நாட்டின் பொருள் வளம்

உழவுத் தொழிலுக்கும் அதன் வளர்ச்சிக்கும் உழும் காளைகள் இன்றியமையாதவை. மிகுதியான வருவாய்க்கு அதிக பால் கறக்கும் பசுக்கள் தேவையாகின்றன. வயல் வளமும், செல்வ வளமும் ஒரு சேர வேண்டிப் பெண்கள் நோன்பு மேற்கொண்டிருந்தனர். பகடுகளின் சிறப்பு நோக்கிப் பண்டைக்கால புலவர்கள் வள்ளல்களின் பகடுகளையும் வாழ்த்திப் பாடினர். பகடு சிறத்தல் என்பது எண்ணிக்கையில் அதிகரித்து உழவுத் தொழிலை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகப் பாடப்படுகிறது. மேலும், பசுக்களின் மடியில் அதிக பால் ஊரவேண்டுமென்றும் வணங்குகின்றனர் என்பதனை

*பால்பல ஊறுக பகடுபல சிறக்க*

*எனவேட் டோளே யாயே யாமே* - (ஐங் - 3)

என்ற பாடல் வரிகள் மூலம் நாட்டின் தொழில் வளமும் செல்வ வளமும் சிறக்கும் என்ற எண்ணமும் நாட்டின் மீதான பற்றும் புலப்படுகிறது.

இதனை,

*இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு* (குறள் - 81)

என்று வள்ளுவர் வேளாண்மையின் சிறப்பையும், இல்லறத்தின் சிறப்பையும் ஒப்பிடுகிறார்.

## மன்னரின் திறம்

நாட்டை ஆளுகின்ற மன்னன் திறமையுடன் செயல்படும்போது நாடு மட்டுமின்றி மக்களும் மகிழ்ச்சியாக வாழ்வார்கள். மக்களுடைய மகிழ்ச்சியைத் தொடர்ந்து அந்நாட்டில் பஞ்சமும் வலிமையை முறியடிக்கப்படவும், பருவ மழை தவறாது பெய்யவும் நாட்டின் நலனையே விரும்புகின்ற தலைவி,

*பகைவர்புல் ஆர்க பார்ப்பார் ஓதுக*
*எனவேட் டோளே யாயே யாமே* - (ஐங் - 4)

மன்னன் வாழ்க ! அவன் பகைவர் பெருமை இழந்து புல்லரிசிச் சோறு உண்க : பார்ப்பனர் வேதம் ஓதுக ! என்றே விரும்பினாள் தலைவி, கரும்பும் பூக்கும், நெல்லும் பூக்கும். ஆனால் கரும்பு பூத்து தன் பரம்பரையை வளர்க்காது. நெல் பூத்தும் காய்த்தும் தன் வழிமுறையை வளர்க்கும். அதுபோலப் பூத்தாலும் பரத்தை மகப் பெற்றுக் குடியை வளர்க்கமாட்டாள். தலைவி பிள்ளை பெற்று வளர்த்துக் குடியை வளரச் செய்வாள். இவ்வுள்ளுறை ஓரம்போகியோரின் உலகியல் அறிவையும் உளவியல் அறிவையும் ஒருசேரக் காட்டுகிறது.

மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமானால் வீரமுடைய அரசன் மட்டும் போதாது. நாட்டில் வறுமை பிணி இல்லாதிருக்க வேண்டும் இக்கருத்தைப் புலவர் அவர்க் உறுபசியும் ஓவாப்பிணியும் சேராது இயல்வது நல்ல நாடு என வரையறை கொடுக்கிறார். எனவே தான் தலைவி, இறைவனிடம்

*பசிஇல் ஆகுக பிணிசேண் நீங்குக*
*எனவேட் டோளே யாயே யாமே* (ஐங் - 5)

மன்னன் வாழ்க, நாட்டில் பசி என்ற பிணி அல்லது நோய் இல்லாமல் நீங்குக, ஏனைய நோய்களும் அண்டாமல் நீங்கிச் செல்க, என்றே தலைவி வேண்டினாள். நானோ ஆண் முதலை தன்னோடு வாழும் முதிர்ந்து பெரிய மீனைத் தேர்ந்து உண்ணும் நீர் நிலைகளைக் கொண்ட ஊரை உடையவன். பிற பெண்களின் வீட்டு முற்றத்தில் அல்லாமல் நாட்டின் எம் முற்றத்தில் வாழ வேண்டாம் என வேண்டினேன் என்கிறாள். நாட்டின் நன்மையைக் கருதி

வாழ்ந்த தலைமக்கள், மன்னனின் வீரத்தை மதித்தனர் மேலும், மணிமேகலை நூலில் அட்சயப் பாத்திரம் வழங்கிய மணிமேகலை தெய்வம்.

*பசியும் பிணியும் பகையும் நீங்கி*

*வசியும் வலினும் சுரக்க* (மணிமே - 1.70)

என வாழ்த்துவதாக மணிமேகலை நூல் குறிப்பிடுகிறது.

## மன்னரின் ஆட்சி

குடியை ஆளும் கோமகன் நல்லநெறியில் செங்கோல் ஆட்சி செலுத்தி வந்தால் நாட்டில் நேர்மையும் நீதியும் சிறந்து விளங்கும். அன்று நாட்டை ஆண்ட கோப்பெருஞ்சோழன், மனுநீதிச்சோழன், பொற்கைப் பாண்டியன் ஆகியோர் நீதிக்காகவும் நேர்மைக்காகவும் தன்னையும் தன் உறுப்புகளையும் உயிர்களையும் கூட நாட்டுக்காக அர்ப்பணித்தார்கள். மன்னனுடைய ஆட்சியில் நேர்மை, நீதி, கொடி கட்டி பறக்கும் சமயத்தில் மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இதனை

*வேந்துபகை தணிக ஆண்டுபல நந்துக*

*எனவேட் டோளே யாயே யாமே* (ஐங் - 6)

என்ற வரியின் மூலம் மன்னனின் பகைவரெல்லாம் அவனுடைய நண்பர்களாக மாற வேண்டும் என்பதைச் சுட்டுகிறது. இதனால் நாட்டில் அமைதி நிலவும் என்பது தலைவியின் எண்ணம். மேலும் அமைதியற்ற நாட்டில் இல்லறம் சிறந்து விளங்க முடியாது என்பதாலும் இவ்வாறு கூறுவதாகக் கொள்ளலாம். இதனால், வேந்தனின் உயிர் வாழும் காலம் அதிகரிக்க தலைவி வேண்டுகிறாள் என அறிய முடிகிறது. இதனை

*பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்*

*கொல்குறும்பும் இல்லதுநாடு* (குறள் - 735)

என வள்ளுவர் விளக்கமளிக்கிறார்.

## மன்னரின் அறம்

அறத்தின் வழியே நடக்கும் மனிதனே உயர்ந்த நற்குணங்களுக்குக் காரணமானவன். ஏனெனில் அறமே எல்லாவற்றிற்கும் முதன்மையானது. எனவே தான் மனிதனுடைய வாழ்க்கையில் முதலில் அறம் அதன் பின்பு பொருள் மற்றும் இன்பம் அதனால் அமைகின்ற வீடுபேறு என வகைப்படுத்திக் காட்டியிருக்கின்றார். இதனை உணர்ந்த தலைவி மன்னனுடைய ஆட்சியில்,

*அறம் நனி சிறக்க அல்லது கெடுக*
*எனவேட் டோளே யாயே யாமே* (ஐங் - 7)

என அரசனை வாழ்த்தி அவனால் நிலை நிறுத்தப்படும் அறம் தலைக்கு மாறும், அறத்திற்கு மாறானவையான பாவம் நீங்குமாறும் வேண்டினாள். ஏனெனில் அறம் தழைத்து மறுபுறம் பாவங்கள் வளர்ந்தால் எந்தப் பயனும் கிடைக்காது என்பதை அறிந்தே தலைவி அவ்வாறு கூறினாள் என அறியமுடிகிறது.

## மன்னனின் நீதி

ஒரு நாட்டின் அரசன் கடவுளாகக் கருதப்பட்டான். ஆகவே அவன் மக்களின் நலத்தை மனதில் கொண்டு ஆட்சி செய்தல் வேண்டும். மக்களின் நலன் கருதாது ஆட்சி செய்வானேயானால் அவன் நாட்டில் நீதியும் நேர்மை ஒழுங்காக அமையாது. நீதியும் நேர்மையும் இல்லாதபோது அவனது நாட்டில் மக்கள் தீய செயலில் ஈடுபடுவர். மக்களுக்கு அந்த நிலையை ஒரு மன்னன் ஏற்படுத்திவிடக்கூடாது. இவற்றை உணர்ந்த தலைவி நாட்டில் அமைதியும் ஒழுங்கும் நிலைத்து நிற்க

*அரசுமுறை செய்க களவுஇல் ஆகுக*
*எனவேட் டோளே யாயே யாமே* (ஐங் - 8)

என்ற பாடலில் அரசன் முறை செய்யத் தவறினானாயின் நாட்டில் மழை தவறும். மழை தவறினால் மக்களின் வாழ்வு கேள்விக்குள்ளாகும். இதனால் அவனது நாட்டில் கள்வரும், கொள்ளையரும், பிற தீயவர்களும் அவனது நாட்டில் பெருகுவர். இதனால் இல்லறம் சிறந்து விளங்காமல் போய்விடும். அரசு முறை செய்ய வேண்டும் எனவும் களவு இல்லாமல் நீங்க வேண்டும் என்றும் தலைவி வேண்டுவதைக் காணலாம்.

## பொருள் வளம்

உலக நன்மையைக் கருதிய தலைவி இன்பத்திற்குக் காரணமான நற்செயல்கள் பெருகவும், துன்பத்திற்கு காரணமான செயல்கள் அறியவும், விரும்பி வழிபட்டாள். இது உலகின் பொது நன்மை என்றபோதும் இங்கு தேச நலனின் மையப்பொருளே முக்கியப்படுத்தப்பட்டிருக்கிறது.

*நன்று பெரிது சிறக்க தீதுஇல் ஆகுக*
*எனவேட் டோளே யாயே யாமே* (ஐங் - 9)

என தேசத்தின் மீதான அக்கறை தலைவிக்கு இருந்த தன்மையை அறிய முடிகிறது.

சங்ககால தனியுடைமை சமூகத்தின் விழுமிய மதிப்பாக தேசியப் பற்று முக்கியப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஐங்குறுநூறு பல பதில்கள் உணர்த்தி நிற்கின்றன.

*மாரி வாய்க்க வளம்நனி சிறக்க*
*எனவேட் டோளே யாயே யாமே* (ஐங் - 10)

தலைவனின் பிரிவுத் துயரம் தலைவியை வாட்டியபோதும். அதிலிருந்து விடுபட முயற்சிக்கிறாள் தலைவி. மாலைக்காலம் வந்தவுடனே நெல்தூவி மலர் தூவி இறைவனை வழிபட்டு தலைவனின் சிந்தனையை வழிபாட்டின் மீதும் தனது நாட்டின் மீதும் செலுத்துகிறாள். உலக வாழ்வுக்கு இன்றியமையாத மழை வளத்தையும், அதன் விளைவான செல்வ செழிப்பையும் மட்டுமே விரும்பியிருக்கிறாள். இப்பாடலில் நாட்டின் தேசியம் வளம் சிறக்க வேண்டும் என்ற எண்ணம் தலைவிக்கு இருந்தமையை தோழியின் வாயிலாக அறிய முடிகிறது.

## முடிவுரை

தேசிய எழுச்சி பிற்காலத்தில் தோன்றுவதற்கு முன்பாகவே தேசம் பற்றிய சிந்தனை, நாட்டுப்பற்று, தேசியத் தன்மை போன்றவை மக்களிடம் நிலவியுள்ளதை இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. இதனால் தேசியம் பற்றிய சிந்தனை பழங்காலத்தில் இருந்தே இடம் பெற்றுள்ளது.

வேட்கைப்பத்தில் இடம் பெறும் தலைவி நாட்டின் நலனையும், மன்னனின் நல்வாழ்வையும் விரும்புபவளாக உள்ளாள். மேலும், நாட்டு மக்களின் பசி, பிணி, பகை போன்று இல்லாமல் எல்லோரும் அன்புடனும் நேர்மையுடனும் வாழ வேண்டும் என்ற வேட்கை உடையவளாக இருக்கிறாள் என்பதையும், தேசியம் என்பது எல்லைகளும் பண்பாட்டு ஒன்றிணைப்பையும் கொண்ட மக்கள் திரளைக் குறிக்கும் சொல்லாகவும் விளங்குகிறது. தேசியப் பார்வை என்பது நாகரிகமடைந்த வேளாண் சமூக காலத்தில் இருந்து வளரத் தொடங்கியதை ஐங்குறுநூறு பாடல்களின் வழி அறிய முடிகிறது. அரசனும் அவன் கீழ் செயல்படும் அரசு நிறுவனங்களுக்கும் நேர்மையாக இருப்பதே ஐங்குறுநூறு மருதம் உணர்த்து தேசியமாகும்.

# தொல் பொருளதிகாரம் பாடப்பிரிவின் தேவை

பேரா. முனைவர்
இ.கி. இராமசாமி

## முன்னோர் சொத்து

தொல்காப்பியம் உள்ளிட்ட பழந்தமிழ் நூல்கள் நம்முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற வித்துக்கள்; கலை, பண்பாடு, அறிவுச் சிந்தனைச் சொத்துக்கள். (Ancestral properties) – பிதுர்ராஜ்யம். பாட்டன் பூட்டன் விட்டுச் சென்ற செல்வத்தைப் பெருமையோடு அனுபவித்து மகிழ்வதைப் போலத் தொல்காப்பியம் உள்ளிட்ட பழந்தமிழ் நூல்களைக் கேட்டறிந்து கற்று, கற்றுக் கொடுக்க வேண்டும். பத்மநாதசாமி கோயில் சொத்து அவர் பரம்பரையினர்க்கு உரியது என்று சட்டம் சொல்லுகின்றது. ஜமீன் ஒழிப்பு, மன்னர் மானிய ஒழிப்பு ஆகியவற்றைத் தாண்டி இன்றும் மன்னர் பரம்பரைக்கே அது உரியது என்றாகிவிட்டது. அதுபோல் தொல். பொருள் நம்முடையது. அதனை ஆண்டு அனுபவிக்க வேண்டும். நெல்லையில் செயல்பட்ட வட்டத்தொட்டி அமைப்பினர், 'சங்கத் தமிழைத் தூக்கி எறிவோம்; கம்பன் தமிழைக் காப்பாற்றுவோம்?' என்ற இழிசெயலை மேற்கொண்டார். அதனை அறிந்த தமிழ் மறவராகிய சி. இலக்குவனார், சங்கத் தமிழைக் காப்போம், கம்பன் தமிழும் இருக்கட்டும் என்று குரல் கொடுத்தார் சங்கத் தமிழ் என்ற பெயரில் இதழ் ஒன்றையும் நடத்தினார் என்பது சென்ற நூற்றாண்டின் வரலாறு. தொல்காப்பிய இலக்கணத்தையே தம்முனைவர் பட்ட ஆராய்ச்சியாக (The critical study of Tholkappiam) எடுத்துக் கொண்டார். பட்டம் பெற்றார். அவர் வழி வந்த நாம் தொல். பொருளைப் புறக்கணிக்கலாமா? கல்கி ராசேந்திரனும், டாக்டர் மு. வரதராசனாரின் பிள்ளைகளும் தங்கள் தந்தையர் எழுதிய நூல்களை நாட்டுடமை ஆக்க அனுமதிக்கவில்லை என்பதையும் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

## சிறப்புப்பாயிரம்

தொல்காப்பியத்திற்குச் செய்யப்பட்ட பனம்பாரனார் பாயிரம், 'சிறு இலக்கிய வரலாறு' போன்றது என்பார் தமிழண்ணல் (தொல்காப்பியர், சாகித்ய அகாதெமி, புதுதில்லி, 2001, ப. 15). முதல் துணைநூல் பட்டியல் - அதுவும் அடங்கல்முறைத் துணைநூல் பட்டியல் என்று அதனைக் கொள்ளலாம். அதனுள்வரும் 'முந்நூல்'தானே இன்று மு.நூ. என்ற சுருக்கக் குறி பெற்றுள்ளது (op.cit.). தொல்காப்பியர் காலத்தில் 'நூலரங்கேற்றம்' சான்றோர் அவையில் நிகழ்ந்துள்ளது. அத்தகைய முறை இன்று இருந்தால் கண்டவரெல்லாம் நூல் எழுதி தமிழ்மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் தமிழ் நாட்டுக்கும் இழிவை ஏற்படுத்த முடியாது.

செம்மொழி நூல்

தொல்காப்பியம் செம்மொழிப் பட்டியலுள் இடம்பெறும் முதல் இலக்கண நூல். தமிழ்மொழி வழங்கிய நிலப்பரப்பினைச் சொல்லும் நூல். வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு - தமிழரைத் தமிழரே ஆண்டதாகச் சொல்லும் நூல். தொல்காப்பியம் தமிழரின் மரபணு (Gene). மரபணு இல்லாமல் பரம்பரை அமையாது. தொல்காப்பியக் கல்வி என்னும் அடித்தளமின்றிப் பெறுகின்ற ஆய்வு நிறைஞர், முனைவர், மூதறிஞர் பட்டங்களெல்லாம் சரிந்து விடும். தொல்காப்பியத்தின் மூலம் குறைந்தது 500 சொற்களை அறிந்துகொண்டாலே பின்வந்த இலக்கியங்களைப் புரிந்து கொள்ளலாம். 100 நூற்பாக்களைப் பிரித்துப் படித்துப் பொருள் தெரியும் திறன் பெற்றுவிட்டால் எந்த நூலையும் எளிதாகப் படித்து விடலாம்.

*பழம்போலும் சங்கப் பனுவல் கற்றால்*
*கிழம்போகும் கீழ்மை போகும்* — மாணிக்கக்குறள்

## பிறமொழி இலக்கியப் பட்டங்கள்

சமஸ்கிருத இலக்கியம் பயிலும் மாணவர் வேதங்களையும் இராமாயணத்தையும் பாரதத்தையும் பாகவதத்தையும் ஸ்கந்தபுராணத்தையும் ஒதுக்கிவிட்டுப் பட்டம் பெற முடியாது. அப்படி ஒதுக்கி விட்டுப் பெற்ற பட்டங்களை அவர்கள் ஏற்றும் கொள்ளார். சாசர், சேக்ஸ்பியர், மில்டன், ரஸல் ஆகியோரை ஓரங்கட்டிவிட்டு ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற இயலாது. அப்படியிருக்க தமிழனுக்குப் பெருமையும் வலிமையும் சேர்க்கும் தொல். பொருளை - புறக்கணிக்க முடியாது.

## தனித்துவம்

1. தொல். பொருளதிகாரம் - பொருளின் (Materialism) தேவையையும் பயன்பாட்டையும் இயம்புகின்றது.

2. இளைஞரின் பொறுப்பு, முயற்சி, உழைப்பு, வினைத்திட்பம், தன்மானம் ஆகியவற்றைப் பொருட் பிரிவின் மூலம் விளக்குகின்றது.

3. பெண் தனித்துப் பாதுகாப்புடன் இருந்ததை - ஆற்றியிருந்ததை இயம்புகின்றது.

4. அகத்திணைப் பாடல்களில் தலைவன் தலைவி இயற்பெயர் சுட்டப்படாத இலக்கணம் தமிழுக்கே உரியது. பருவ வயது வந்த உயிர்களுக்கெல்லாம் காதல் வரும். அது பொது நியதி. அதனால் பெயர் சுட்டத் தேவையில்லை என்பதைக் கண்டறிந்தார் தொல்காப்பியர். வீரம், கொடை, புகழ் ஆகியன மக்கள் பிறப்பில் சிலருக்கே அமையும். அதனால் அவர்களின் இயற்பெயர் சுட்ட வேண்டும் என்று நெறி வகுத்தார்.

5. அகத்திணை நமக்குப் பாலியல் கல்வியைக் கற்றுக் கொடுக்கின்றது என்கிறார் வ.சுப. மாணிக்கம். ஒருவனுக்கு ஒருத்தி என்ற சமூகக் கட்டுப்பாட்டை வகுத்துக் கொடுத்துள்ளது. அதனால் அன்று தேய்வு நோய் (AIDS) இல்லை, பாஞ்சாலிக்கு 5 பேர் கணவர்; தயரதனுக்கு 60,000 தேவிமார்; கண்ணனுக்கு இலட்சக்கணக்கில் மனைவியர் என்ற பலதாரமணமுறை தமிழர் பண்பாடன்று என்பதை உணர்த்துகிறது தொல். பொருள். இந்துத் திருமணச் சட்டத்திற்குத் தொல்காப்பியம் அடிப்படை ஆகும்.

6. கடலால் கொள்ளப்பட்ட தென்னாட்டிலிருந்து வந்த நிலந்தரு திருவின் பாண்டியன் அவையில் இருந்து எழுதிப் பிற்காலத்தவருக்குப் பயன்படும் வகையில் பழைய இலக்கிய இலக்கண மரபுகளையும் தமிழர் வாழ்வியலையும் ஆவணப்படுத்தினார் தொல்காப்பியர். அவரைத் தமிழின் முதற்பாதுகாவலர் என்று போற்றுகிறார் தமிழண்ணல் (தொல்காப்பியம், சாகித்ய அகாதெமி, புதுதில்லி, 2001, ப. 118).

7. ஒப்பிலக்கிய ஆய்வின் முன்னோடி தொல்காப்பியர். தமிழர் களவுமணமும், யாழோர் கூட்டமும் ( கந்தர்வ வழக்கம் ) வேறுபட்டவை. தமிழரின் களவொழுக்கம் உள்ளத்து அளவினது. பின்னர் உடல் சான்றது. பின்னர் பிரிவு இல்லாதது. காந்தர்வம் மெய்யுறுபுணர்ச்சியுடன் முடிந்து விடுவது; பிரிவுக் குரியது.

8. தொல்காப்பியர் காலத்தில் தோன்றிய சமஸ்கிருத முதன்மை நூல்கள் உள்ளொளியை ஆன்மாவைக் காணமுயன்றன. சொர்க்கத்தைக் காட்ட முயன்றன. தொல்காப்பியம் மானுடம் பேசியது; இவ்வுலக வாழ்வை இயம்பியது.

9. அறிவையும் உணர்வையும் அடிப்படையாகக் கொண்டு உயிரினங்களை 6 வகையாகப் பகுத்துக் காட்டியது. ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை அப்பகுப்பு காரண காரியத்தோடு அமைந்துள்ளது.

10. திணைப் பாகுபாட்டில் தனிமுத்திரை பதித்தவர் தொல்காப்பியர். பொருள்களை உயர்திணை, அஃறிணை ( அல் + திணை ) என இரண்டாக்கினார். திணை என்பதற்கு ஒழுகலாறு என்று பொருள். ஒழுகலாற்றால் உயர்ந்தது உயர்திணை; ஒழுகலாற்றால் உயர்வு இல்லாதது அஃறிணை.

11. இலக்கிய உத்திகளில் மிக நுட்பமான உள்ளுறையும் இறைச்சியும் தொல்காப்பியம் தந்த வளமாகும்.

12. தொல்காப்பியரின் உவமவியலும் மெய்ப்பாட்டியலும் பொருள் புலப்பாட்டு உத்திகளாகும். அவை செய்யுள் உறுப்புக்கள். இருவகை அங்கதமும் இலக்கிய உத்திகள்.

13. தொல்காப்பியத்தில் முன்னர் கூறியபடியே பின்னரும் விதிபெறும் மாட்டேற்று விதிகள் இன்று அடிக்குறிப்புகளில் Location citation போன்றவை.

14. செல்வச் செழிப்பும் உடற்கட்டும் அதிகாரமும் பெற்ற ஆடவர் சிலர், அடிக்கடி நிகழ்ந்த போர் காரணமாக ஆண்களின் எண்ணிக்கை குறைந்து பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபடியால் காமக்கிழத்தியரையோ, பரத்தைமை முறையினையோ மேற்கொண்டிருந்தனர். எனினும் அத்தகைய புறஒழுக்கம் கடியப்பட்டது. 'கொடுமை ஒழுக்கம்' (1093), 'அடங்கா ஒழுக்கத்து அவன் வயன்' (1096), 'பேணா ஒழுக்கம்' (1096) எனக் குறையென்றே கருதப்பட்டது. புறப்பெண்டிர்பால் சென்றவன் திரும்பிவந்தான் என்றே அகப்பாடல்கள் மொழிகின்றன.

15. புறத்திணையில் வரும் காஞ்சித்திணைதான் பழந்தமிழர் தத்துவம் (Philosophy) மெய்யியல் என்று சொல்லப்படுவதும் அதுதான்.

16. செய்யுளியலும் மரபியலும் இலக்கிய வகைமைகளையும் கோட்பாடுகளையும் உள்ளடக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள்.

17. தொல்காப்பியர் சொல்லும் நோக்கு என்னும் உத்தி படைப்பு - படிப்பு, படைப்பாளி - படிப்பாளி ஆகிய இரு தளங்களில் அமைந்தது. பாடலில் இடம்பெறும் ஒவ்வொரு சொல்லும் பொருளும் மாத்திரையும் ஓசையும் பயன்கருதிப் படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அதன் பொருள். நோக்குதல் ஒரு திறனாய்வு உத்தியும் ஆகும். உட்பொருளோடு பார்த்தால், ஆராய்தல், திறனாய்தல் எனப் பலபொருள் இதற்கு உண்டு.

## காரணிகள் சில

1. சங்கப் பாடல்களுக்கு முந்தைய தமிழிலக்கிய வளத்தையும் தமிழிலக்கண மரபையும் அறிய உதவும் கருவி பொருளதிகாரமே.

2. இடைக்காலத்தில் தொல்காப்பியப் பொருளதிகாரம் கிடைக்காமையால் வருந்திய பாண்டியன் ஒருவனின் கூற்றாக இறையனார் களவியல் கூறும் செய்தி, பொருளதிகாரத்தின் இன்றியமையாமையை உணர்த்துவதாகும். ( எழுத்தும் சொல்லும் பொருளதிகாரத்தின் பொருட்டன்றே ! பொருளதிகாரம் கிட்டாவிடில் இவை கிட்டியும் பயனின்றே !)

3. தமிழ்த் திறனாய்வு நெறிமுறையை ( சான்று, நோக்கு போல்வன ) அறிந்து கொள்ள உதவுவது தொல்காப்பியப் பொருளதிகாரமே.

4. கணக்கீட்டில் தமிழர் வல்லாண்மையுடையோர் என்பதற்குத் தொல்காப்பியச் செய்யுளியலின் தொடைவிகற்ப எண்ணிக்கை சான்றாகும். அதனை இளைய தமிழ்த் தலைமுறைக்கு எடுத்துக்காட்ட, அதனைப் பாடமாகக் கற்பிப்பதே முறையாகும்.

   இளம்: 13000 +, நச்: 19000 +

5. பிற பண்பாட்டு, இலக்கியக் கலப்பில்லாத தமிழின் நிலையை மாணவர்கள் அறிவதற்குத் துணையாவது பொருளதிகாரமே.

6. பொருளதிகாரம் இலக்கணம் மட்டுமன்று; அது வாழ்க்கைக்கான வழிகாட்டலும் கூட, அக இலக்கணம், புற இலக்கணம் என்பன அக வாழ்க்கை, புறவாழ்க்கை என்ற இரண்டின் வரையறையே. இன்றைக்குக் காலமேலாண்மை, வாழ்க்கை மேம்பாடு பற்றிய பட்டய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவை பொருளதிகாரத்தின் இயல்களில் வேறு

வடிவில் கூறப்பெற்றுள்ளவையே. இவற்றை இளந்தமிழர்கள் கற்பது காலத்தின் தேவையாகும்.

7. தமிழில் முதல் நூலாகக் கிடைத்துள்ள தொல்காப்பியத்தை முழுமையாகக் கற்பிப்பதே முறை. இல்லையெனில் அது பிழையாகும். பொருளதிகாரத்தைப் பாடத்திட்டத்திலிருந்து நீக்கினால் அது வரலாற்றுப் பழியாக மாறிவிடும். பெண்கொலை புரிந்த நன்னன் நிலையே இவ் அடாத செயலைச் செய்வோர்க்கு ஏற்படும்.

8. சங்க இலக்கியங்களைப் புரிந்து கொள்ள பிற்கால இலக்கண நூல்களான இறையனார் களவியல், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற நூல்கள் உதவா. ஏனென்றால் களவுக்குரிய காலம் எத்தனை திங்கள் / ஆண்டுகள் எனத் தொல்காப்பியர் வரையறை செய்யவில்லை. சங்கப் பாடல்களில் இவ்வகையான வரையறை கூறப்படவில்லை. காதலுக்குக் காலம் வகுப்பது அறிவுக்குப் பொருந்தாத செயல் என்றே அறிவியல் உலகும் கருதுகின்றது. ஆனால் இறையனார் களவியலாசிரியர் இரண்டு திங்கள் என்று காலவரையறை செய்கின்றார். உரைகாரரோ இன்னும் பலபடி மேலே சென்று ஆண் 15 ஆண்டுகளும் 10 மாதமும் உடையவனாகவும் பெண் 11 ஆண்டுகளும் 10 மாதமும் உடையவளாகவும் இருந்து எஞ்சிய இரு மாதங்களே களவொழுக்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும், அதற்குப் பிந்தைய காலம் அதாவது (16, 12 வயதுகள்) மகப்பேற்றுக்காலம் என்றும், அக்காலத்தில் காதல் கொண்டால் மகப்பேறு வழியுண்டாகிவிடும் என்றும் கருத்துப்பட உரைக்கின்றார். இவை தமிழொடு பட்ட மரபன்று என்பது வெளிப்படை. தொல்காப்பியர் அகத்திணைகளில் முதல் திணையாகக் கருதிய கைக்கிளையைப் புறப்பொருள் வெண்பாமாலையுடையார் புறத்திணையாகக் கூறுவதும் இவ்வகையினவாம். எனவே தமிழ் அகப்புறமரபினை அறிய பொருளதிகாரத்தைக் கற்பதே முறையாகும் எனலாம்.

9. பொருளதிகாரம் தோன்றுவதற்கு ஓர் உச்சநிலையடைந்த நாகரிகமுடைய சமுதாயம் தேவை. எனவே பொருளதிகாரத்தைக் கற்பது ஓர் உச்சநிலையடைந்த நாகரிகத்தின் பண்பாட்டைக் கற்பதாகும். பழங்காலச் சமூகத்தில் நன்னிலையடைந்த சமூகத்தின் கோட்பாடுகளைக் கற்க உதவுவது பொருளதிகாரமே.

10. பண்பாட்டு மானிடவியல், சமூகவியல் முதலான இக்காலத் துறைகளுக்கான கருத்தியல்களின் ஊற்றுக்கண்ணாக விளங்கும் பொருளதிகாரத்தை மாணவர் கற்க வேண்டியதும் நாம் கற்பிக்க வேண்டியதும் நம் காலத்தின் தேவையாகும்.

11. இனம், நிலம் கடந்த உலக ஒருமைப்பாட்டுச் சிந்தனையை ஆழமாக விதைத்த முதல்வர் தொல்காப்பியரே. கரணமொடு புணர்ந்தது கற்பு என்பாரே தவிர தாலிகட்டுவதோடு என்றோ, கருகமணி கட்டுவதோடு என்றோ, மோதிரம் மாற்றுவதோடு என்றோ கூறவில்லை என்பதைக் காண்க ! தொல்காப்பியர் காலத்து வேந்தர்களை அறிய இயலாமையும் (போந்தை, வேம்பு, ஆர் மலைந்த மாபெருந் தானையர் என்றே பொதுப்படக் குறிப்பதும்) நோக்கத்தக்கது.

தொல்காப்பியம் பண்டைத் தமிழர் திருமண முறையினையும், மாறுபாடு இல்லாத சடங்கு முறையினையும், இல்லற நெறியினையும் இயம்புகின்றது. அதற்கு இலக்கியச் சான்றுகளை உரைகாரர்கள் காட்டுகின்றனர் (அகம். 86 – 136).

## புலால் தவிர்த்தோர்

1. திங்களும் உரோகிணியும் கூடிய நன்னாளில் நிகழ்ந்தது.
2. வைகறைப் பொழுதில் மணவினை நிகழ்ந்தது.
3. பந்தல்போட்டு அதன்கீழ் புதுமணல் பரப்பினர்.
4. விளக்குகளை வரிசையாக ஏற்றினர்.
5. மாலைகளைத் தொங்கவிட்டு வீட்டை அழகுபடுத்தினர்.
6. உழுந்துப் பொங்கலை விருந்தாகப் படைத்தனர்.
7. பெண்கள் தண்ணீர் கொண்டுவந்து மகிழ்ச்சி ஆரவாரத்தோடு நெல்லும் பூவும் கலந்து தலைமகளை நீராட்டினர்.

   *"கற்பினின் வழாஅ நற்பல் உதவி*
   *பெற்றோர் பெட்கும் பிணை ஆகுக"* என வாழ்த்தினர். அவர்கள்
   புதல்வரைப் பெற்ற 4 தாயர் ஆவர்.

8. அன்றே இருவரையும் தனியறைப்படுத்தினர்.

தொடர்ச்சி அடுத்த இதழில்....

# தமிழா !
# எங்கே போகிறாய்?

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

என்னடா, தமிழா? உன்னை
எண்ணியே நொறுங்கிப் போனேன் !
அன்னையின் பாலை உண்டே,
அவளையே மிதிப்போன் என்றால்
உன்னைப் போல் உலகில் உண்டா?
உயிர்த்தமிழ் மொழியில் பாடம்
உன்பிள்ளை கற்ப தற்கும்
ஒப்பாமல் எதிர்க்கின் றாயே !
நறுந்தமிழ் செய்த குற்றம்
நாம் ஆய்ந்தால் ஒன்றே உண்டு !
தறுதலைத் தமிழ னுக்குத்
தாயாக வாய்த்த தஃதே !
அறிவார்ந்த மேலை நாட்டில்
அம்மொழி பிறந்தி ருந்தால்
உறுபுகழ் பெறுமே ! என்றே
உருகியே சொன்னார் அண்ணா !
வீதியில் தமிழும் உண்டா?
விளம்பரம் தமிழில் உண்டா?
நீதிக்கே வாதம் செய்யும்
நெடுமன்றில் தமிழும் உண்டா?
ஆதிநற் கோயில் எல்லாம்
அர்ச்சனைத் தமிழில் உண்டா?
ஏதடா இசைய ரங்கில்
இன்தமிழ்? வெட்கம் வேண்டாம்
தாய்மொழி போற்றும் நாடே

தரணியில் உயரக் கண்டோம்!
வாய்விட்டுச் சொல்வ தென்றால்
வளர்கின்ற சப்பான் சாட்சி!
சேய்களின் பெயரைக் கூட
செழுந்தமிழ் மணக்கும் வண்ணம்
போய்வைக்கத் தயங்கும் நீதான்
பூத்தாயா தமிழச் சிக்கே?

## வாசகர் வாசகம் (2)

தமிழினியீர்,

வணக்கம். நலம் வேண்டும். செந்தமிழ் – திங்களிதழ் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. மிகவும் பாராட்டி மகிழ்கின்றோம்.

கட்டுரை மற்றும் படைப்புக்களின் ஆசிரியர் பெயருடன், அவர்களது கைப்பேசி எண்ணையும் வெளியிட்டால், அத்துறையில் ஈடுபாடு உள்ளோர் அவர்களுடன் தொடர்பு கொண்டு மேலும் அத்துறை குறித்த ஆய்வில் இணைந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள வழி கிடைக்குமல்லவா?

எண்ணிப்பார்த்து, ஏற்பன செய்திட அன்புடன் வேண்டுகிறேன்.

இனிய தமிழுணர்வோடு
**தமிழியல் ஆய்வு அறக்கட்டளை**
337, திருவள்ளுவர் நகர், கள்ளிப்பட்டி – 638 505
ஈரோடு மாவட்டம், அலைபேசி : 94427 16372

## வாசகர் வாசகம் (3)

மதிப்புயர் செந்தமிழ் இதழாசிரியர் அவர்கட்கு,

வணக்கம்!

நவம்பர் 2011 இதழில் திரு. வெ. பெருமாள்சாமி அவர்கள் எழுதிய கட்டுரை சிறப்பாகவும் புதுமையாகவும் இருந்தது. அமரர். சுப. அண்ணா மலையாரை நினைவு கூறும் வகையில் நால்வர் பெற்ற அருள் – இருந்தது.

திரு. சு. அண்ணாமலையார் பற்றிய கவிதாஞ்சலியாக எழுதியனுப்பியுள்ளேன்.

திரு. வி. நாகசுந்தரத்தின் முழங்கு கடல் முசிறி பற்றிய தொடர் ஆய்வு செந்தமிழ் இதழின் சிறப்பை உயர்த்தியுள்ளது.

அன்புடன்,
**தெ. முருகசாமி** புதுச்சேரி

## ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா



தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 January 2012 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI M.A., M.Phil.** on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI M.A., M.Phil.**